

கழகத் தலைவர் –முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் –துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதிக்கான சமூக வலைதளப் பயிற்சி மாவட்ட கழகச் செயலாளர், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புதுறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தலைமையில், இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு முன்னிலையில் நடைபெற்றது. இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் பை.மு.ராமஜெயம் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில், சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூரத்தி, சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து, சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

### ஆஸ்திரேலிய பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டம்!

# அயலகத் தமிழர் நலவாரியத்தின் கூட்டு நிகழ்ச்சி!

## நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி பங்கேற்பு!

*சிட்னி, ஆக. 15 -*

ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (APATC), மற்றும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் கூட்டு நிகழ்ச்சியில் அயலக நல வாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பங்கேற்பு சிறப்புரையாற்றினர்.

ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (APATC), மற்றும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் கூட்டு நிகழ்ச்சியை 2025 ஆகஸ்ட் 9, சனிக்கிழமையன்று சிட்னியில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக நடத்தியது. இந்நிகழ்ச்சியில் அயலகத் தமிழர் நல வாரியத்தின் (NonResident Tamils Welfare Board NRTWB) தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாரியத்தின் பங்களிப்பு மற்றும் ஆதரவு குறித்து விரிவாகப் பேசினார்.

இந்நிகழ்ச்சி, தமிழ் புலம்பெயர் சமூகத்தினரை ஒருங்கிணைத்து, அவர்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு ஒரு முக்கிய தளமாக அமைந்தது. இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியம், தமிழ்நாட்டிற்கு வெளியே வாழும் தமிழர்களின் சவால்களை எதிர்கொள்ளவும், அவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு முக்கிய அமைப்பாகும்.

இவற்றில் சட்ட மற்றும் நிதி உதவிகள், கலாச்சார மற்றும் கல்வி பரிமாற்றங்கள், மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்களின் உரிமைகளுக்காக வாதிடுதல் ஆகியவை அடங்கும். “வெளிநாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழரும் தங்கள் பூர்வீகத்துடன் இணைந்திருக்கவும், அவர்கள் வாழும் நாடுகளில் செழிப்புடன் வாழவும் எங்கள் வாரியம் உறுதிபூண்டுள்ளது,” என்று வாரியத்தின் பல்வேறு முயற்சிகளை கார்த்திகேய சிவசேனாபதி தனது உரையில் விளக்கி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆஸ்திரேலிய பசுமைக் கட்சியின் முன்னாள் செனட்டர் லீ ரியன்னான், நியூ சவுத் வேல்ஸ் மாநில பாராளுமன்ற உறுப்பினர் வாரன் கிர்ப்பி, மற்றும் APATCஇன் தலைவர் அண்ணாமலை மகிழ்நன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆஸ்திரேலியாவின் பன்முக கலாச்சார சமூகத்தில் தமிழர்களின் பங்களிப்பை இருவரும் பாராட்டினர். அண்ணாமலை மகிழ்நன், பெரியார் ஈ.வெ. ராமசாமி மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் ஆகியோரின் சமூக நீதி மற்றும் பகுத்தறிவு சிந்தனைகளை மேம்படுத்துவதற்கு APATCஇன் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இரண்டு முக்கியமான புத்தகங்கள் வெளியிடப்பட்டன. சிட்னியில் வாழும் அறிஞர் ஞானகுரு தினகரன் செல்லையா அவர்களின் சனாதன லீக்ஸ் என்ற புத்தகம், சமூககலாச்சார பிரச்சினைகளை ஆழமாக ஆராய்கிறது. மற்றொரு புத்தகமான இந்து தேசியம், தமிழறிஞர் தொ. பரமசிவம் அவர்களால் தமிழில் எழுதப்பட்டு, APATCஇன் பொதுச்செயலாளர் சுமதி விஜய் அவர்களால் ஆங்கிலத்தில் Hindu Nationalism என்று மொழி பெயர்க்கப்பட்டது. இந்த புத்தகங்கள் புரவலர்களால் பெரிதும் பாராட்டப்பட்டன.

நிகழ்ச்சியில் பாரம்பரிய தமிழ் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன, இது தமிழ் கலாச்சாரத்தின் பெருமையை வெளிப்படுத்தியது. 200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், சமூகத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர் சமூக உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆழமான விவாதங்களிலும் பிணைப்பு வாய்ப்புகளிலும் ஈடுபட்டனர்.

ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம், சமூக சீர்திருத்தம், சமத்துவம் மற்றும் கலாச்சார பாதுகாப்பு குறித்து உரையாடலை மேம்படுத்துவதற்கு தனது உறுதியை மீண்டும் வலியுறுத்தியது. அயலகத் தமிழர் நல வாரியத்தின் ஆதரவிற்கும், நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்தது.



மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் பரணிதரன் விபத்தில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை மாநில இளைஞர் அணியின் துணைச்செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. நேற்று முன்தினம் (13.08.2025) மாலை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் – கொளக்காநத்தத்தில்

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மருத்துவ முகாம்!

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

*பெரம்பலூர், ஆக. 15 -*

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டத்திற்குட்பட்ட கொளக்காநத்தம் அரசு மேல்நிலை பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ் தலைமையில் பார்வையிட்டு, மருத்துவ முகாமிற்கு வந்திருந்த நபர்களின் குறைகளை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் முழு உடல் பரிசோதனை செய்த நபர்களுக்கான உடனடியாக மருத்துவ அறிக்கையினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.5,435 மதிப்பிலான காதொலி கருவி, ஊன்றுகோல், மடக்கு ஊன்றுகோல் ஆகிய உதவி உபகரணங்களும், 17 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டையினையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற மருத்துவ முகாமினை தமிழ்நாடு முழுவதும் 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். இம்மருத்துவ முகாம் பெரம்பலூர் மாவட்டத்தில் துங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 02.08.2025 அன்று நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து ஆலத்தூர் வட்டத்திற்குட்பட்ட கொளக்காநத்தம் அரசு மேல்நிலை பள்ளியில் இன்று நடைபெற்றது. இந்த முகாமில் 17 உயர் சிறப்பு மருத்துவ பிரிவுகளை சார்ந்த மருத்துவர்களை கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது.

மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை வழங்குவதற்கும், மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கும் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட துறை வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமினை பார்வையிட்ட போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள், மருத்துவ முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களிடம் தாங்கள் எவ்வித சிகிச்சைக்காக வந்துள்ளீர்கள் என கேட்டறிந்து அது தொடர்பான மருத்துவ சிகிச்சை வழங்கிடுமாறு மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெறுவது குறித்து கிராமப்புறம் உள்ளிட்ட அனைத்து தரப்பு பொதுமக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் தேவையான விளம்பர விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட சுகாதார அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

கிராமப்புறங்களில் நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள், ஊராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், முதியவர்கள் அனைவரும் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த 17 உயர் சிறப்பு மருத்துவ பிரிவு அரங்குகளையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் பார்வையிட்டார்.

இதில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும்,

முன்னாள் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி, இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.மாரிமுத்து, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. கீதா, தேசிய சுகாதார இயக்க திட்ட இயக்குநர் மரு.விவேகானந்தன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.மகாலட்சுமி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வட்ட அவைத் தலைவர் சோ.துரைபாண்டியன் ஏற்பாடு! பகுதிப் பொறுப்பாளர் மதியழகன் துவக்கி வைத்தார்!

# கோவை - இடையார்பாளையம் - அறிஞர் அண்ணா நகரில் ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்’!

## சம்பத் எம்.சி. – வட்டச் செயலாளர் குமரேசன் ரேசன் பொருட்கள் வழங்கினார்!

*கோவை, ஆக. 15 -*

கோவை இடையார்பாளையம் பகுதி அறிஞர் அண்ணா நகரில் உள்ள ரேசன் கடையில் அவைத் தலைவர் சோ.துரை பாண்டியன் ஏற்பாட்டில், பகுதி பொறுப்பாளர் மதியழகன் துவக்கி வைக்க மாமன்ற உறுப்பினர் சம்பத் வட்ட செயலாளர் குமரேசன் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கினார்கள்.

கழகத் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ள தாயுமானவர் திட்டமானது அறிஞர் அண்ணா நகரில் உள்ள நியாய விலை கடையில் வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ. ரவி ஆலோசனையின் பேரில், அறிஞர் அண்ணா நகர் நலச்சங்க தலைவரும் அவை தலைவருமான சோ.துரைப்பாண்டியன் ஏற்பாட்டில், இடையர்பாளையம் பகுதிக் கழகப் பொறுப்பாளர் மதியழகன் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

இதில் முதன் முதலாக நவநீதம், நரசிம்மன் குடும்பத் தார் ரேசன் பொருட்களை பெற்றுக் கொண்டனர்.

35 வது மாமன்ற உறுப்பினர் நா.சம்பத், வட்டக் கழகச் செயலாளர் ஆர்.குமரேசன், ஆகியோரும் ரேசன் பொருட்களை முதியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார்கள். வீடு தேடி சென்று ரேசன் பொருட்களை வழங்கும் உன்னத திட்டமானது துவக்கப் பட்டு அறிஞர் அண்ணா நகர், அன்பு நகர், ஆட்டோ நகர், லட்சுமி நகர், மாசாணி அம்மன் நகர் கூலி நெசவாளர் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு நேரில் சென்று ரேஷன் கடை வின்பனை யாளர், மாணிக்கராஜ் மற்றும் ஊழியர்கள் துணையுடன் வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோ ர்கள் இத் திட்டத்தினால் பயன் அடைந்ததால், அவர்கள் குடும்பத்தார் நமது கழகத் தலைவரை போற்றி புகழ்ந்த னர்.

இந்நிகழ்வில் கீழ்க்கண்ட கழக மூத்த முன்னோடி களும் நிர்வாகிகளும், கலந்துகொண்டு பயனாளிகளை அடையாளம் கண்டு ரேசன் பொருட்கள் வழங்குவதில் பெரும்பங்கு ஆற்றினர். மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் நடராஜன், பகுதி கழக துணைச் செயலாளர் கண்ணகி, BLA2 க்கள் சோனைசாமி, சங்கரபாண்டியன், சிராஜுதீன், லயன் சந்திரலிங்கம், சலூன் பாலன், இ சர்வீஸ் மோகன்ராஜ், பாட்ஷா பாய், ராஜேந்திரன், சரவணன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டு தங்களது பங்களிப்பை திறம்பட செய்தனர். பொது மக்கள் தாமாகவே முன் வந்து மகிழ்ச்சி யுடன் இத் திட்டத்தை வரவேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் கீழையூரில் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடிச் சென்று அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.ஸ்ரீதர், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேஷ்வரி, மற்றும் பலர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க, சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் தி.மு.கவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் – குன்னம் தொகுதி– செந்துறை ஊராட்சி ஒன்றியம்

# நமங்குனம் கிராமத்தில் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்து – வீடுகளுக்குச் சென்று குடிமைப் பொருள்கள் வழங்கினார்!

*அரியலூர், ஆக. 15 -*

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்துக்கு உட்பட்ட நமங்குனம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்ட செயல்பாட்டினை போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தொடங்கி வைத்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களின் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருட்களை வழங்கினார் திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்து 51 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களில் 70 வயதுக்கு மேற்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளிகள் குடும்ப அட்டை என 19,661 குடும்ப அட்டை தாரர்கள் பயனடைவார்கள் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கூறியதாவது:

மின்சார பேருந்துகள் சோதனை அடிப்படையில் சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது இது காலத்தின் அவசியம். காற்று மாசு ஏற்படுகின்ற சூழலை மாற்ற வேண்டும் என உலக அளவில் ஒரு இயக்கமே நடைபெறுகிறது டெல்லியில் ஒவ்வொரு ஆண்டும் சில குறிப்பிட்ட மாதங்களில் காற்று மாசு அதிகமாக இருக்கின்ற போது வாகன போக்குவரத்தை தடை செய்கின்ற சூழல் உள்ளது எனவே அந்த பிரச்சனை வராமல் பெரு நகரமாக இருக்கின்ற சென்னையில் முதல் கட்டமாக மின்சார பேருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளது நேற்றைய தினம் கூட சென்னையில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மின்சாரப் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து படிப்படியாக காலப்போக்கில் மற்ற இடங்களுக்கும் கொண்டு வரப்படும். மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் பாய்ண்ட் பல இடங்களில் தனியார் மூலம் ஏற்பட்டு வருகிறது அரசின் சார்பில் சார்ஜிங் பாயிண்ட் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மகளிர் விடியல் பயண திட்டம் ஆந்திராவில் செயல்பட்டிருப்பது குறித்த கேள்விக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கு இலவச விடியல் பயணம் தொடங்கப்படும் என அறிவித்தபோது பலரும் இது சாத்திய மற்ற திட்டம் எனக் கூறினார்கள் அது தற்போது வெற்றிகரமான திட்டமாக முதலமைச்சர் நடத்தி காட்டி உள்ளார் ஒவ்வொரு நாளும் மிக அதிக அளவில் பெண்கள் கட்டணம் இல்ல இலவச பேருந்தை பயன்படுத்தி வருகிறார்கள் இதனை தொடர்ந்து தான் தெலுங்கானா கர்நாடகா மாநிலங்களில் விடியல் பயணச் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது தற்பொழுது பக்கத்து மாநிலமான ஆந்திரா மாநிலத்திலும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது நமது மாநிலம் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டு மாநிலமாகவும் நமது முதலமைச்சர் மற்ற மாநில முதலமைச்சருக்கு வழிகாட்டும் முதலமைச்ச ராகவும் உள்ளார் என்பது தெளிவாக தெரிகிறது

வாக்காளர் பட்டியலில் குழப்பத்தை ஏற்படுத்தி யார் லாபம் பார்த்தார்களோ அவர்களுக்கு துணையாக எடப்பாடி பழனிச்சாமி இருக்கிறார் ராகுல் காந்தி ஆதாரப்பூர்வமாக பல்வேறு தெளிவான குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார் இன்றைக்கு பொது ஊடகங்களில் மிகப்பெரிய விவாதமாக மாறி வருகிறது நடுநிலையாக இருப்பவர்கள் இது குறித்து கவலையும் தெரிவித்துள்ளார்கள் இது குறித்து உச்சநீதிமன்றமும் கேள்வி கேட்டபோது இவற்றையெல்லாம் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என சொல்லுகின்ற அளவிற்கு தேர்தல் ஆணையம் உள்ளது இது எந்த அளவிற்கு போகிறது என்றால் ஒன்றிய பாஜக அரசின் கைப்பிடியில் தேர்தல் ஆணையம் இருப்பதை தான் காட்டுகிறது எனவே அவர்களோடு இருக்கின்றவர்கள் என்ற காரணத்தினால் எடப்பாடி பழனிச்சாமி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை ஆனால் நஷ்டம் என்று வரும்போது அவர்களது கட்சிக்கும் வரும் என்பதை உணராமல் இருக்கிறார் என்று கூறினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஒன்றியத்துக்கு உட்பட்ட பெரிய தள்ளப்பாடி,கோவிந்தாபுரம் ஊராட்சிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்பெரிய தள்ளப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது , நிகழ்ச்சி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலாஜி, தவமணி, தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் மூன்றாம் பட்டி எஸ் குமரேசன்,மத்திய ஒன்றிய செயலாளர் எக்கூர் செல்வம்,தெற்கு ஒன்றிய செயலாளர் ரஜினி செல்வம், மாவட்ட பொருளாளர் கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்,